## (**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 119/2018 அ.சா.7

Name : திரு. சிவக்குமார்

Father's name :

Village :

Taluk :

Caste :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 24.10.2025.

முதல் விசாரணை:-

நான் திருச்சி மாநகர தில்லை நகர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 21.10.2015 ம் தேதி எழுமலை காவல்நிலையத்தில் வட்ட ஆய்வாளராக பணியாற்றியபோது 19.30 மணியளவில் உதவி ஆய்வாளர் மாயாண்டி மேற்படி காவல்நிலைய குற்ற எண்.169/2015 ன் கீழ் பதிவு செய்திருந்த வழக்கு கோப்பை அன்று 21.30 மணியளவில் மேல்விசாரணைக்காக ஒப்படைத்தார். மேற்படி வழக்கு சம்பந்தமான புகார் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு சம்பந்தமான முதல் தகவல் அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் வழக்கு கோப்பை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 21.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அன்னக்கொடி, சுந்தரம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகசர் என்னிடம்

காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தயார் செய்த வரைபடம் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்று இரவு 22.30 மணியளவில் சம்பவ இடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் உடைந்த கண்ணாடி துண்டுகள் மற்றும் இரண்டு கற்களை கைப்பற்றினேன். அது சம்பந்தமான அத்தாட்சி என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் கைப்பற்றிய கற்கள் மற்றும் கண்ணாடி துண்டுகள் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது ஏற்கனவே அ.சா.பொ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் சாட்சிகள் மணிமுருகன், செல்வராஜ், சுப்பிரமணி, செல்வம், அன்னக்கொடி, சுந்தரம் மற்றும் சார்பு ஆய்வாளர் மாயாண்டி ஆகியோர்களை விசாரித்து அவர்களுடைய வாக்குமூலங்களை தனிதனியாக பதிவு செய்தேன். பின்னர் 22.10.2015 ம் தேதி இவ்வழக்கின் சாட்சி மணிமுருகனை விசாரித்து எதிரிகள் பெயர் குறித்து மறுவாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் பரமாராஜ், ஈஸ்வரன் ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னர் உடைந்த ஜன்னலில் இருந்து விழுந்துகிடந்த கண்ணாடி துண்டுகளை சேத மதிப்பு செய்ய ஸ்ரீவாசிமலையான் மரக்கடை ஆசாரியிடம் காண்பித்து சேத மதிப்பு சான்றிதழ் பெற்றேன். அவர் அளித்த சேத மதிப்பு சான்றிதழ் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அவர் தற்சமயம் எங்கு உள்ளார் என தெரியவில்லை. அந்த சான்றிதழ் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 22.10.2015 ம் தேதி மதியம் 15.00 மணிக்கு எழுமலை கண்மாய் மடையில் வைத்து காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் முன்னிலையில் எதிரிகள் வேலுச்சாமி, அய்யாதுரை, ரமேஷ், குமார், முருகன், சதீஷ்குமார், சூர்யா, முத்துப்பாண்டி, குருவராஜ், ஞானராஜ், சடையாண்டி மகன் ராஜேந்திரன், கருப்பையா மகன் ராஜேந்திரன்,

வினோத்குமார், பிரேம்குமார், பிச்சைபாண்டி, கார்மேகம், பாலமுருகன், மகாராஜன் ஆகியோர்களை கைது செய்தேன். அப்போது எதிரி வேலுச்சாமி ஒப்புதல் வாக்குமூலம் ஒன்று கொடுத்தார். அப்போது அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை நிலையம் கொண்டு வந்து 17.15 மணிக்கு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் நான் பணிமாறுதல் ஆகிவிட்டதால் பின்னால் வந்த ஆய்வாளர் செல்வம் இந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். சாட்சிகள் குவிமுச பிரிவு 161(3)ன் கீழான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது போலவே என்னிடம் வாக்குமூலம் கொடுத்தார்கள்.

<u>2, 3, 4, 9, 14, 15, 16, 17, 18, 19 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 மணிமுருகன் எதிரிகள் பெயர் எதையும் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அய்யாதுரை, வேலுச்சாமி, ரமேஷ் ஆகியோர்கள் பெயரை மட்டும் குறிப்பிட்டுள்ளார். மற்றவர்கள் பெயர் குறிப்பிடவில்லை. சுமார் 25 பேர் என குறிப்பிட்டுள்ளார். அவர்களுடைய உயரம், நிறம், பருமன், எடை ஆகியவை குறித்து அ.சா.ஆ.1 புகாரில் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை. (மறுவாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என சாட்சி கூறுகிறார்). அய்யாதுரை, வேலுச்சாமி, ரமேஷ் கையில் இருந்த கருங்கற்களை எடுத்துக்கொண்டு செத்து தொலைந்துபோடா என்று கூறி கற்களை எறிந்ததாக புகாரில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் செத்து தொலைந்துபோடா என்ற வார்த்தை மட்டும் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் விலகாவிட்டால் என் மீது பட்டு உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் என புகாரில் வாசகம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. நான் விலகிகொள்ளவே என்று புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என சாட்சி கூறுகிறார். ( குவிமுச

பிரிவு 161(3)ன் கீழான வாக்குமூலத்தில் நான் விலகாவிட்டால் என் மீது பட்டு உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் என அசா.1 கூறியுள்ளார் என சாட்சி கூறுகிறார்). அ.சா.4 அன்னக்கொடி தன்னுடன் சுந்தரம் என்ற கிராம உதவியாளர் இருந்ததாகவும், எழுமலை முத்தலாம்மன் கோவில் அருகில் வருவாய் துறை சார்பான தங்களது பணி முடிந்து கிளம்பும்போது சம்பவ இடத்தை பார்வையிட காவல் ஆய்வாளர் வந்ததாகவும், அவரது குவிமுச பிரிவு 161 (3)ன் கீழான வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியிருக்கவில்லை என்று சொன்னால் பணிமுடிந்து கிளம்பும்போது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. அன்னக்கொடி குவிமுச பிரிவு 161(3) ன் கீழான வாக்குமூலத்தில் ஆய்வாளர் அலுவலகத்திற்கு அருகே நின்று கொண்டிருந்த காருக்கு அருகே இரண்டு கருப்பு கற்களை எடுத்தார்கள் என்றும், உடைந்த கண்ணாடி துண்டுகளை எடுத்தார்கள் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் காருக்கு அருகே எடுத்ததாக சொல்லவில்லை. இரவு 10.30 மணிக்கு சம்பவ இடத்தில் கிடந்த கற்கள் 2 மற்றும் காவல் ஆய்வாளர் அலுவலகத்தில் உடைந்த ஜன்னல் கண்ணாடி துகள்கள் சிறிதளவை ஆய்வாளர் கைப்பற்றியதாக சொல்லியுள்ளார்.

முதல் தகவல் அறிக்கையில் புகார்தாரரின் கையொப்பம் எதுவும் காணப்படவில்லை என்று சொன்னால் காணப்படவில்லை. முதல் தகவல் அறிக்கையில் அது நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நேரம், தேதி குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் தொகுதி 15 ல் நேரம், நாள் குறிப்பிடப்படவில்லை. இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் எங்கிருந்தேன் என்று கேட்டால் உத்தப்புரம் கோவிலில் இருந்தேன். மாயாண்டியிடம் வழக்கு பதிவு செய்யுமாறு சொன்னேனா என்று கேட்டால் அவர் புகார் வந்துள்ளதாக சொன்னார். நான் மேல் அதிகாரியிடம் கேட்டு அதை பதிவு செய்யுமாறு சொன்னேன்.

ஆய்வாளர் அலுவலகத்தில் மொத்தம் 6 ஜன்னல் உள்ளது. அதில் எத்தனை ஜன்னல் கண்ணாடி உடைந்திருந்தது என்று கேட்டால் ஒரே ஒரு ஜன்னல் கண்ணாடி தான் உடைந்திருந்தது. ஒரு ஜன்னலில் இரண்டு ப்ரேம் இருந்தது. அதில் எந்த ப்ரேமில் கண்ணாடி உடைந்திருந்தது என்று கேட்டால் இரண்டு ப்ரேமிலும் கண்ணாடி உடைந்திருந்தது. இரண்டு ப்ரேம்களும் உடைந்திருந்ததாக புகாரிலும், குவிமுச பிரிவு 161(3)ன் கீழான வாக்குமூலத்திலும் புகார்தாரர் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் ஜன்னலில் பட்டு கண்ணாடி உடைந்துவிட்டது என்று சொல்லியுள்ளார். இந்த வழக்கில் எதிரிகளை அடையாளம் காட்ட ஆள்காட்டு அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தப்படவில்லை. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் தவிர பாக்கி 9 பேர் யார் என அடையாளம் கண்டேனா என்றால் அடையாளம் காணவில்லை. சம்பவ சமயத்தில் புகார்தாரர் எந்த பணியில் இருந்தார் என்று கேட்டால் காவல்நிலைய பாராவாக இருந்தார். அந்த சமயத்தில் அவருடன் காவல்நிலையத்தில் வேறு எந்த காவலர்கள் இருந்தார்கள் என்று கேட்டால் கோவில் திருவிழா என்பதால் கோவில் பணிக்காக மற்ற அனைவரும் சென்றுவிட்டார்கள். அந்த சமயத்தில் புகார்தாரரை தவிர வேறு காவல் துறை அதிகாரி எவரும் காவல்நிலையத்தில் இருந்திருக்கவில்லை என சாட்சி கூறுகிறார். காவல்நிலையம் வேறு காவல் ஆய்வாளர் அலுவலகம் வேறு என்று சொன்னால் இரண்டும் அருகருகே உள்ளது. ஆனால் தனித்தனி கட்டிடம். ஆய்வாளர் அலுவலகத்தில் அந்த சமயத்தில் வேறு யாரும் பணியில் இல்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியில் எழுமலையை சுற்றியுள்ள 18 பட்டி மக்கள் கும்பிடும் முத்தாலம்மன் திருவிழா எழுமலை கிராமத்தில் நடைபெற்றது. கோவில் எழுமலையில் அமைந்துள்ளது. எழுமலை மற்றும் 18 பட்டி கிராமத்தைச்சேர்ந்த அனைத்து சமுதாயத்தை சேர்ந்தவர்களும் கும்பிடும் திருவிழா.

மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு ஆத்தங்கரைபட்டி, எ.சுப்புலாபுரம் பகுதியை சேர்ந்தவர்களுக்கு இடையே சாமியை தூக்கி செல்வது சம்பந்தமாக பிரச்சனை எதுவும் ஏற்படக்கூடாது என ஆர்டிஓ தலைமையில் சமாதானக் கூட்டம் எதுவும் நடைபெற்றது என்று சொன்னால் நடைபெற்றது. அதில் 18 பட்டி தலைவர்களும் கலந்து கொண்டதாக சாட்சி கூறுகிறார்.

21.10.2015 ம் தேதி மாலை 6.30 மணிக்கு எழுமலை கனக்கன்குளம் கண்மாய் கழுங்கு அருகே ஆத்தங்கரைபட்டி கிராமத்தை சார்ந்தவர்களுக்கும், எ.சுப்புலாபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் ஏற்பட்டது. முத்தாலம்மன் கோவில் திருவிழாவிற்கு 1 லட்சம் மக்கள் கூடுவார்கள் என்று சொன்னால் ஐம்பதாயிரம் பேர் கூடுவார்கள். அம்மன் ஊர்வலம் வரும்போது ஊரில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு சாமி தேருக்கு மட்டும் மின்விளக்கு போடப்படும் என்று சொன்னால் அது சரியல்ல. காவல்நிலையம் முன்பாக அந்த அம்மன் தேர் செல்வது வழக்கம். அந்த சமயத்தில் காவல்நிலையம் முன்பு எத்ததை பேர் இருந்தார்கள் என்று கேட்டால் காவலுக்கு யாரையும் போடவில்லை. 21.10.2015 ம் தேதி எழுமலை காவல்நிலையத்தில் மொத்தம் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன என்று கேட்டால் மொத்தம் 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அந்த வழக்கு சம்பந்தமான குற்ற எண்கள் எனக்கு தெரியாது. குற்ற எண்.167/2015 மற்றும் 171/2015 வழக்குகளும் அன்று பதிவு செய்யப்பட்டிருந்தன. மேற்படி 3 வழக்குகளிலும் இந்த வழக்கின் எதிரிகள், எதிரிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் எதிரிகள் இரண்டு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். மேற்படி எழுமலையில் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு அருகே இருந்திருக்ககூடிய பொது

நபர் எவரையும் நான் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. ஜன்னல் உடைந்ததாக நிரூபிக்க நான் புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை. சேத மதிப்பு வழங்கியதாக கூறப்படும் நபர் சேத மதிப்பு வழங்க தகுதியற்றவர் என்று சொன்னால் அது சரியல்ல. இந்த வழக்கின் சாட்சிகளை எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்று கேட்டால் மணிமுருகன், செல்வராஜ், சுப்பிரமணி, செல்வம், மாயாண்டி, அன்னக்கொடி, சுந்தரம் ஆகியோர்களை சம்பவ இடத்தில் வைத்து சம்பவம் நடந்த அன்று சுமார் 23.00 மணியளவில் விசாரித்தேன். 22.10.2015 ம் தேதி சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் பரமராஜ், ஈஸ்வரன் ஆகியோர்களை காலை சுமார் 11 மணியளவில் விசாரித்தேன். நான் சொன்ன தேதியில், நேரத்தில், நான் சொன்ன சாட்சிகள் முன்னிலையில் சம்பவம் இடம் எதையும் பார்வையிடவில்லை என்றும், சாட்சிகள் எவரையும் விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. நான் சொன்ன தேதியில், நேரத்தில், நான் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. பார்வை மகசர், வரைடம், சான்றுபொருள்கள் இந்த வழக்கிற்காக பின்னிட்டு ஜோடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. கற்கள் மற்றும் கண்ணாடி துகள்கள் எளிதில் கிடைக்ககூடியவை என்று சொன்னால் கிடைக்கக்கூடியவை தான். குற்ற எண்.167/2015 மற்றும் 171/2015 வழக்குகளில் புலன் விசாரணை செய்யப்படவில்லை என்றும், இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் அதை DSP விசாரித்தார். இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் ஆத்தங்கரைபட்டி, எ.சுப்புலாபுரத்தை சார்ந்தவர்கள் மீது வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் நான் அவர்கள் மீது வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை. DSP பதிவு செய்திருந்தார். எதிரி வேலுச்சாமி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக பொய்யாக கூறியுள்ளேன் என்று

சொன்னால் அது சரியல்ல. இந்த வழக்கில் சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிகள் மீது பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல.

**மற்ற எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை அனுசரிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.**

Sd/- சிவக்குமார்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2025.10.25 11:00:31 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.